DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT, NAMAKKAL.

**CASE NO.STC.No. 99 /2025**

**PW- 4**

| | | |
|---|---|---|
| Name | : | சதீஸ்குமார்(LW-5) |
| Father's Name | : | சண்முகம் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the

Date: 18.02.2026

**விசாரணை தொடங்கும் நேரம்: காலை 11.45 மணி**

**(எதிரி ஆஜரில்லை, எதிரி தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை:**

**1.** நான் தற்போது நாமக்கல் மாவட்டம் மோகனூர் புதுபட்டியில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். 10.09.2024ம் தேதி இரவு 8.30 மணியளவில் நான் புதுபட்டி வடக்குமேடு விநாயகா மளிகைகடை அருகே இருக்கும் டீகடையில் இருந்தேன். திடீரென்று சத்தம் கேட்டது. வெளியே வந்து பார்த்தபோது இருசக்கர வாகனத்தின் மீது கார் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. இருசக்கர வாகனத்தில் வந்த பிரேம்குமார், அபிநயா ஆகியோர்களுக்கும், நடந்து வந்த ராதா என்பவருக்கும் காயங்கள் ஏற்பட்டிருந்தது. அவர்களை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். விபத்து ஏற்பட்டவுடன் காரின் ஓட்டுநர் அங்கிருந்து ஓடிவிட்டதால் அவரை நான் பார்க்கவில்லை. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியானவர் போலீசார் விசாரணையில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் இந்த சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. நீதிமன்றம் அனுமதி அளித்தது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

2. போலீசார் என்னை விசாரித்தபோது நான் முதல் விசாரணையில் சொன்ன தேதி, மணி, இடத்தில் நாமக்கல் - திருச்சி சாலையை ராதா என்பவர் கிழக்கிலிருந்து - மேற்கு நோக்கி கடந்தபோது எதிரி தினேஷ் அதேசாலையில் TN 33 BC 5655 பதிவெண் கொண்ட காரை வடக்கிலிருந்து - தெற்குநோக்கி அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து ராதா மீது மோதி விபத்தை ஏற்படுத்தி மேலும் சென்று அதே சாலையில் இருசக்கர வாகனத்தில் வந்த

பிரேம்குமார் மற்றும் அபிநயா மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றும், இந்த சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை**

**மறுவிசாரணை: இல்லை**

**விசாரணை முடியும் நேரம்:** காலை 11.55 மணி